முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் கண்ணானந்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

25.02.2019, திங்கட்கிழமை

1. **வாருமப்பா தரும நோக்கிலே**
**வரம்தர அரங்க ஞானி இருக்க**
**தாருமப்பா பொருளாதார உதவியும்**
**தன்னார்வ தொண்டுமிக்கவர்களாகவே**

2. ஆகவே அனைவரும் இணைந்து
அரங்கனின் சீடர்களாகி வருக
யுகமே தருமபலம் அடைவதுடன்
உயர் ஞானயுகம் ஆகும் என்று கூறி

3. கூறியே நித்ய பிரசன்ன ஆசியை
குறையிலா **விளம்பி சாலின் திங்கள்**
**தெரியவே முன்னான்கோர் திகதி சோமவாரம்**
**(விளம்பி வருடம் மாசி மாதம் 13ம் நாள் 25.02.2019, திங்கட்கிழமை)**
**தேசிகனுக்கு கண்ணானந்தர் யானும்**

4. யானும் உலக மக்கள் நலமுற உரைப்பேன்
உயர்வான அன்னதான நெறிகள்
ஞானயுகம் படைக்கும் சக்திளாக
ஞானிகளின் வெளிப்பாடாக இருக்க

5. இருக்கவே அரங்கன் தலைமையான
ஏழாம் படை வீட்டு சக்தியிலிருந்து
கருத்தாக பூசைகளும் வழிபாடும்
கருணைமிக்க தருமமும் வளர்ந்து வருக

6. வருகவே ஏழாம் படை வீட்டுக்கு
வருகை தரும் மக்களுக்கு
முருகப்பெருமான் ஆசியும் தயவும்
முழுமை ஞானமும் வந்தடைய நேரும்

7. நேருமைபட வாழ்ந்து கொண்டு
நீதி மாறா சன்மார்க்க நெறி
தருமநெறி தொடர்ந்து வருகவே
தவசி அரங்கன் அவதார நோக்கம்

8. நோக்கம் உணர்த்தப்பட்டு நன்கு
நிலவுலகே அமைதியும் காப்பும்
ஊக்கமான வளமும் காணக் கூடும்
உண்மைபட தலைவனாக குருவாக

9. குருவாக அரங்கனை ஏற்ற மக்கள்
குறையிலா வாழ்வும் வளமும்
திருவருளும் சர்வ பலமும்
தேவைக்கேற்ற அருளும் பொருளும்

10. பொருளுடன் நல்மக்கள் உறவு
புகழான வாழ்வும் மகிழ்வும்
வறுமைத் துன்பங்களில்லா
வளமும் வல்லமையும் ஏற்றமும்

11. ஏற்றமும் அரங்க ஞானி தயவால்
எல்லா மாற்றமும் காண்கும்
ஆற்றல்பட அருளும் கூடி
ஆறுமுகன் தலைமை ஞானயுகமாகும் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் கண்ணானந்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

வாருங்கள் உலக மக்களே ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலை நோக்கி தர்மசிந்தையுடன் வந்து தர்மம் செய்யும் உங்களுக்கு வரம்தர முருகப்பெருமானின் அவதார ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகன் இருக்கின்றார். தாருங்கள் உலக மக்களே அரங்கனின் தானதருமப் பணிகள் தடைபடாமல் நடந்திட தாராளமாய் பொருளுதவிகளையும் தன்னார்வமாய் தன்னலமற்ற தொண்டுகளையும், ஆறுமுக அரங்கமகா தேசிகனின் சீடர்களாகி வந்துவிட்டால் இந்த உலகமே தருமபலத்தினை அடைவதுடன் உயர்வான உயர் ஞானயுகமாக ஆகிடுமப்பா என்று கூறியே ஆறுமுக அரங்கன் புகழை உலகமெலாம் எடுத்துக் கூறி உலக மக்களெல்லாம் நலம் பெறும் வகையினிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே கண்ணானந்தர் யானுமே **விளம்பி வருடம் மாசி மாதம் 13ஆம் நாள் 25.02.2019, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே உரைக்கின்றேன் என்கிறார் மகான் கண்ணானந்தர்.

சர்வ வல்லமைமிக்கதும் ஞானமளிக்க வல்லதுமாகிய பசித்தவர்களின் பசிப்பிணியை போக்குதலான அன்னதான நெறிகள் ஞானயுகத்தை படைக்கும் சக்தியாக அன்னதானம் செய்திட்ட தர்மபலம் ஞானிகளின் வெளிப்பாடாக இருக்கின்றபடியினாலே ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தலைமையில் சர்வவல்லமையுடன் அமைந்திட்ட ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினில் நடக்கின்ற ஞானபூஜைகளும், வழிபாடுகளும் கருணைமிக்க தருமமும் நாளும் நாளும் வளர்ந்து வருகின்றதினாலே ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலிற்கு வருகை தருகின்ற மக்களுக்கு முருகப்பெருமானின் அருளாசிகளும் தயவும் முழுமை ஞானமும் தானே வந்தடையுமப்பா.

தருமத்தின் வழிதனிலே நேர்மையுடன் வாழ்ந்து வருவதுடன் நீதிக்கு தலை வணங்கி நீதி மாறாது வாழ்ந்து நீதிநெறியான சன்மார்க்க நெறியினை தருமநெறியினை கடைப்பிடித்து உத்தமராய் வாழ்ந்து வரவர, தவசி அவதார ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அவதார நோக்கம் அவர்களுக்குள் உணர்த்தப்பட்டு இந்த உலகமே அமைதியையும் ஞானிகளின் அருள் பாதுகாப்பையும் பெறுவதோடு நல்ல முன்னேற்றங்களையும் வளங்களையும் பெற்று உயர்வடையும்.

உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனை குலகுருவாக ஏற்றுக் கொண்ட மக்களெல்லாம் குறையற்ற நிறைவான வாழ்வினையும் வளமான வாழ்வினையும் திருவருளாம் கடவுளின் அருளையும் சர்வபலத்தினையும் பெற்று அவரவர் தேவைக்கேற்ப அருள்பலத்தையும் பொருள்பலத்தையும் பெறுவதோடு நல்ல மக்களின் நட்பினையும் பெற்று புகழ்மிக்க வாழ்வினை மிக்க மகிழ்ச்சியோடு அமைதியுடன் வறுமை எனும் இல்லாமைத் துன்பம் ஏதும் இல்லாமல் சிறப்புடன் வாழ்வார்கள்.

அவர்களது வாழ்வினில் நாள்நாளும் வளம் பெருகி வல்லமைகளும் பெருகிடும். நல்ல முன்னேற்றமான வாழ்வினை அரங்கன் அருளால் பெற்று சிறப்படைவார்கள்.

உலகினில் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தயவினால் சகலவிதமான நல்ல மாற்றங்கள் உருவாகி அருள் ஆற்றலும் வல்லமையும் பெருகி இவ்வுலகம் முருகப்பெருமானின் தலைமையில் ஞானயுகமாக மாறிடும் என தமது நித்ய பிரசன்ன ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் கண்ணானந்தர்.

–சுபம்–